# இரசாயனவியல்

## இரசாயனச் சூத்திரங்களின் வகைகள்



## அனுபவச் சூத்திரம்

சேர்வையின் மூலகங்களின் திணிவுகளில் இருந்து கணிக்கப்படும் மிகச்சிறிய வகைச் சூத்திரம் இதுவேயாகும்

## கட்டமைப்புச் சூத்திரம்

சேர்வையில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை அணுக்களுக்கிடையிலான பிணைப்பு, அணுக்களின் சார்பு நிலை என்பவற்றைக் குறிக்கும்

| மூலக்கூற்று சூத்திரம் | கட்டமைப்புச் சூத்திரம் | அனுபவச் சூத்திரம் |
|---|---|---|
| Ethane $C_2H_6$ |  | $CH_3CH_3$ |
| Ethanol $C_2H_6O$ |  | $CH_3CH_2OH$ |
| Propane $C_3H_8$ |  | $CH_3CH_2CH_3$ |

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அனுபவச் சூத்திரம் - HO

மூலக்கூற்றுச் சூத்திரம் - $H_2O_2$

கட்டமைப்புச் சூத்திரம்










அனுபவச் சூத்திரம் - $CH_3$

மூலக்கூற்றுச் சூத்திரம் - $C_2H_6$

கட்டமைப்புச் சூத்திரம்











Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அனுபவச் சூத்திரம் - $CH_2$

மூலக்கூற்றுச் சூத்திரம் - $C_2H_4$

கட்டமைப்புச் சூத்திரம்







அனுபவச் சூத்திரம் - CH

மூலக்கூற்றுச் சூத்திரம் - $C_6H_6$

கட்டமைப்புச் சூத்திரம்







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அனுபவ சூத்திரத்தை தீர்மானிப்பதற்கான அடிப்படை படிமுறைகள்

(i) ஒரு சேர்வையைத் தோற்றுவிக்கும் ஒவ்வொரு மூலகத்தின் திணிவையும் கிராமில் பெற வேண்டும்

(ii) ஒவ்வொரு அணுவினதும் மூல் எண்ணிக்கையை கணித்தல்

$$\text{மூல்} = \frac{\text{திணிவு}}{\text{அணுத்திணிவு}}$$

(iii) மிகக்குறைந்த மூல் எண்ணிக்கை பெறுமதியால் அனைத்து மூல் எண்ணிக்கையையும் வகுத்தல்

(iv) படி (iii) இல் பெற்ற எல்லா எண்களும் முழு எண்களாக வருமாறு பொருத்தமான மிகச்சிறிய எண்ணால் வகுக்க வேண்டும்

இவ்வாறு பெறப்படுவது அனுபவச் சூத்திரம் ஆகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விளக்குவதற்கு உதாரணம்

**1**

ஒரு அசேதன உப்பு A பின்வரும் திணிவு நூற்று வீதங்களைக் கொண்டுள்ளது. 23.3% Mg, 30.7% S, 46.0% O. உப்பு A யின் அனுபவச் சூத்திரம் மற்றும் இரசாயனச் சூத்திரத்தையும் தருக?
(Mg - 24 , S = 32 , O = 16)




| | Mg | S | O |
|---|---|---|---|
| திணிவு நூற்றுவீதம் | 23.3 | 30.7 | 46.0 |
| மூல் விகிதம் | $\frac{23.3}{24}$ | $\frac{30.7}{32}$ | $\frac{46.0}{16}$ |
| | 0.970 | 0.959 | 2.875 |
| எளிய விகிதம் | $\frac{0.970}{0.959}$ | $\frac{0.959}{0.959}$ | $\frac{2.875}{0.959}$ |
| | 1.011 | 1.00 | 2.997 |
| | 1 | 1 | 3 |

அனுபவச் சூத்திரம் - $MgSO_3$

இரசாயனச் சூத்திரம் - $MgSO_3$




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி வினாக்கள்

1

ஒரு அசேதனச் சேர்வை X பின்வருவனவற்றை திணிவு நூற்று வீதங்களைக் கொண்டுள்ளது.
27.165% MgO , 60.70% $SiO_2$, 12.14% $H_2O$
சேர்வை X இன் இராசாயனச் சூத்திரத்தை தருக?

2

ஒரு அசேதன உப்பு A பின்வரும் திணிவு நூற்று வீதங்களைக் கொண்டுள்ளது.
14.29% Fe , 16.33% S, 57.14% O, 5.10% H, 7.14% N A இன் சார்மூலக்கூற்றுத் திணிவு 392. இங்கு N ஆனது $NH_4^+$ வடிவில் காணப்படுகிறது எனக் கொள்க.

1. உப்பு A இன் அனுபவச் சூத்திரம் யாது?
2. உப்பு A இன் இரசாயனச் சூத்திரம்

3

நீர் ஏற்றப்பட்ட ஒரு அசேதனச் சேர்வை Y பின்வரும் திணிவு நூற்றுவீதங்களைக் கொண்டுள்ளது 12.10% Na , 14.19% Al, 22.14% Si, 42.09% O, 9.48% $H_2O$
(C = 12, Na = 23, Al = 27, Si = 28 , O = 16, H = 1)

1. சேர்வை Y இன் அனுபவச் சூத்திரம் யாது?
2. சேர்வை Y இன் இரசாயனச் சூத்திரம் யாது?

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4

அசேதனச் சேர்வை A பின்வரும் திணிவு நூற்று வீதங்களை மட்டும் கொண்டுள்ளது 21.6% Na , 33.3% Cl, 45.1% O,

1. சேர்வை A இன் அனுபவச் சூத்திரம் யாது?
2. சேர்வை A இன் இரசாயனச் சூத்திரம் யாது?
3. சேர்வை A இன் மூலர்திறன் யாது?

5

அசேதன உப்பு X ஆனது Cr, S, O, ஐ மட்டும் கொண்டுள்ளது அவற்றின் திணிவு நூற்று வீதங்கள் முறையே Cr 26.52% , S 24.52% , O 48.96% ஆகும். அவ் உப்பு X இன் அனுபவச் சூத்திரத்தையும், இரசாயனச் சூத்திரத்தையும் தருக?

6

தரப்பட்ட சேதனச் சேர்வை A ஆனது C, H, O, N இனை மட்டும் கொண்டுள்ளது. சேர்வையின் சார் மூலக்கூற்றுத்திணிவு 150 ஆகும். சேர்வையின் முற்றான தகனத்தில் வெளிவிடப்பட்ட $CO_2$, $H_2O$, $N_2$ என்பவற்றின் திணிவு விகிதங்கள் முறையே 17.6:4.5:1.4 ஆகும். சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் காண்க? சேர்வையின் மூலர்திறன் யாது?

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 7

ஒரு அசேதன உப்பு P Na, S, H, O ஆகியவற்றை மாத்திரம் கொண்டுள்ள நீர் ஏற்றிய உப்பாகும். அது திணிவிலான 18.5% Na, 25.8% S, மற்றும் 4% H மிகுதி O ஆகியவற்றைக் கோண்டுள்ளது. இச் சேர்வையில் H ஆனது $H_2O$ ஆக மாத்திரம் உள்ளது.

1. P இன் அனுபவச் சூத்திரம் யாது?
2. P இன் சார் மூலக்கூற்றுத்திணிவு 248 ஆயின் அதன் மூலக்கூற்றுச் சூத்திரத்தை உய்த்தறிக?
3. உப்பு P இன் அன்னயனின் கட்டமைப்பு வடிவம் என்பவற்றை தருக?

## 8

அசேதன உப்பு P ஆனது முற்றாக வெப்பப் பிரிகையடைந்து $Cr_2O_3$ 1.52g, $H_2O$ 0.72g, $N_2$ 0.28g, ஆகியவற்றை மாத்திரம் விளைபொருளாக கொடுத்தது. (H = 1, N = 14, O = 16, Cr = 52)

1. P இன் அனுபவச் சூத்திரத்தை தருக?

2. உப்பு P Cr இன் இரு அணுக்களைக் கொண்டுள்ளது. உப்பு P ஆனது $H_2O$ மூலக்கூறுகளைக் கொண்டிருக்கவில்லை. P இன் அனுபவச் சூத்திரத்தைக் காண்க. உப்பு P இல் இருக்கும் கற்றயன், அன்னயன் என்பவற்றை இனம் கண்டு குறிப்பிடுக?

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு.து.பிரதீபன், ஆசிரியர் , (இரசாயனவியல்), (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிளா, ஆசிரியர் - (த.தொ.தொ), (வ/முதலியார்குளம் றோ.க.த.க.பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

9

ஒரு திண்ம நீரேற்றிய அசேதன உப்பு A 9.37% Mg, 10.93% N, 37.52% O , 42.18% $H_2O$ ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
(Mg=24 , N = 14, O=16)

1. உப்பு A இன் அனுபவச் சூத்திரம் யாது?
2. உப்பு A ஒரு nitrate ஆயின் அதன் மூலக்கூற்றுச் சூத்திரம் யாது?









Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk